1978 செப்டம்பர் 7] [திரு. அ. ரகுமான்கான்]

ஆனல், திரும்பத் திரும்ப ஆளுநர் உறையில் பட்டுப் புழு வளர்ப்பதைப் பற்றியும், பால் அதிகமாக உற்பத்தி செய்யப் படுவதைப் பற்றியும், காடு வளர்ப்பதைப்பற்றியும், பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்குவதைப்பற்றியும், மின்னிணைப்பு தருவதில் தீவிரமாகப் போகப் போகிருேம் என்பதைப்பற்றியும், மருத்துவ மனைகள் இல்லாத ஊர்களுக்கு மருத்துவமனைகள் அமைப்பது பற்றியும், மருத்துவக் குழுக்கள் அமைப்பது பற்றியும், டி. எல். லைசென்ஸ் தனியாருக்குத் தர மாட்டோம் என்பது பற்றியும் இப்படிப்பட்ட அதிகாரிகள் செய்யக்கூடிய நிர்வாக நடவடிக்கை களைத்தான் சாதனை என்று சொல்கிருர்கள்.

அடுத்து ஒரே பாணி, ஒரே ராகம் என்று சொல்வதைப்போல், to root out corruption at all levels எல்லா மட்டத்திலும் இலஞ்சத்தை ஒழிப்போம் என்று சொல்கிருர்கள், ஆனல் இந்தப் புனித ஆட்சியில் இலஞ்சம் ஒழிக்கப்படவில்லை என்பதை நான் இங்கே ஆதாரத்தோடு சொல்லிக்கொள்ள முடியும்.

* * *

(7) அறிவிப்பு.

பிரஞ்சு நாஷனல் அசெம்பளி உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளைக் கண்ணுறுதல்

Mr. SPEAKER: I have to announce to the House that five Members from the French National Assembly are now witnessing the proceedings of this House from the Speaker's Gallery. I have great pleasure in extending to them the warm welcome of this House.

(மாண்புமிகு உறுப்பினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்)

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவரவர்களே,

* * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையிலே இருக்கிற மற்ருெரு உறுப்பினரைப்பற்றித்தான் குற்றம் சாட்டுகிறீர்கள். நம்முடைய அவையிலே கடைபிடித்துவரும் மரபை கனம் உறுப் பினர் பின்பற்றத் தவறிவிட்டார் என்று கருதுகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.